**வடக்கு கிழக்கு நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு (டபிள்யூஏஸ்எச்) செயற்றிட்டம் - 2013**

---

வடக்கு கிழக்கு நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு (டபிள்யூஏஸ்எச்) முன்னோடிச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ,,இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) உலக வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 நவம்பர் 29 ஆம் திகதிய ரிஎவ் 010773 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 2.06(இ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

வடக்கு கிழக்கு நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் (டபிள்யூஏஸ்எச்) மானிய உடன்படிக்கையின்படி, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. உள்ளூர் மட்ட நீர், சுகாதார மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், விளைவுரீதியான உருவாக்கல் எச்சரிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு நடைமுறையின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்வதனை பிரதிபலிக்கும் மாதிரிகள் மற்றும் மீள்குடியேறியோரின் ஒட்டுமொத்த சமூக வாழ்க்கைத்தரம் என்பனவற்றை உள்ளடக்கிய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாவட்டங்களிற்குள் தெரிவு செய்யப்பட்ட சமூகங்களிற்குள் மோதல்களிற்குப் பிந்திய வீடமைப்பு நிர்மாண குறுக்கீட்டு முறைப்பாடுகளிற்கு பாதுகாப்பான மற்றும் நிலையான குழாய் வழி நீர் வழங்கலுக்கான நுழைவுத்தன்மையை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 297.28 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.49 மில்லியனானதுடன் அதில் ரூபா 257.28 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.01 மில்லியன் அல்லது 80.23 சதவீதம் உலக வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 நவம்பர் 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பாரத்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை

கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கத்தினதும் நன்கொடையளிக்கும் முகவர்களினதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 161,834,615 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் ரூபா 210,307,217 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினத்தின் பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| தளபாட உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் | 9,500 | 5,260,186 | 5,269,686 |
| நடைபெறும் வேலை | 161,825,115 | 43,212,416 | 205,037,531 |
| | 161,834,615 | 48,472,602 | 210,307,217 |

### 4.2 விசேட டொலர் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட செயற்திட்டத்தின் விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 1 இல் உள்ளவாறு | 895,425 | 113,863,080 |
| கூட்டு: மீளளிப்புகள் | 471,672 | 61,532,882 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | 2,006,987 |
| | 1,367,097 | 177,402,949 |
| கழி: பற்றுதல்கள் | 1,073,727 | 139,043,878 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 293,370 | 38,359,071 |

## 5 கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய ரூபா 1,369,193 ஆன தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட (டொலர்) கணக்கில் இருந்த ரூபா 38,359,071 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் உலக வங்கி நிதிகளில் (மானியங்கள்) பயன்படுத்தப்பட்ட நிதிகளாக கருதப்பட்டிருந்தது

### 5.2. விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மானிய உடன்படிக்கையின் 2.06 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கணக்கீட்டு காலத்திற்குமான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த பின்னரும் ஆறு மாதங்களிற்கு பிந்தாமல் உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 21 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நி.பி 134(3) மற்றும் 2010 யூலை 20 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை ஏற்பட்ட மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| உலக வங்கி | 2.01 | 257.28 | 175 | 144.15 | 180.62 |
| இலங்கை அரசாங்கம் | 0.48 | 40.00 | 25 | 17.68 | 29.68 |
| மொத்தம் | 2.49 | 297.28 | 200 | 161.83 | 210.30 |

## 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையான செயற்திட்டக்காலத்தினையும் உள்ளடக்கியதாக காலாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதீகரீதியான இலக்குடன் முழுமையான விபரமான நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட திட்டத்தின்படி செயற்திட்டக் செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட நடவடிக்கை திட்டத்தையோ அல்லது பொறிமுறையையை அடிப்படையாகக் கொண்ட முன்னேற்ற அறிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மேற்குறிப்பிட்ட திட்டம் செயற்திட்ட செயற்பாடுகளிற்கான ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு வழிகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதகிரிரமும் நீர் வழங்கல் திட்டத்திற்காக 02 ஆழ் கிணறுகளின் நிர்மாணத்தில் 208.15 சதுர மீற்றர் பாறை அகற்றுவதற்கு வேறுபட்ட கட்டளைகள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,912,876 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், வேலைத்தளத்தில் பாறைத் துண்டுகள் புதைக்கப்பட்டதுடன் அவர்களுடைய நடவடிக்கைகளிற்காக அந்த பாறை துண்டுகளை பயன்படுத்தவதற்கு நீர் வழங்கல் பயன்பாட்டு அமைப்புகள் அனுமதிக்கப்பட்டது.

(இ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட சுகாதார முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் 388 வீட்டுடைமையாளர்களிற்காக மலசல கூட வசதிகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 298 வீட்டுடைமையாளர்களிற்காக மலசல கூட வசதிகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், திருகோணமலை மாவட்டத்தில் 04 கிராமங்களின் 1,121 குடும்பங்களிற்கு தண்ணீர் மீற்றருடன் நீர் இணைப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழாய் வழி நீர் இணைப்பு வழங்குவதன் முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

**இலக்கிடப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை**

| தெரிவுசெய்யப்பட்ட கிராமங்கள் | ஆரம்பம் | திருத்தப்பட்டது | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நாமல் வத்தை | 232 | 104 | 50 |
| நவற்சிலி | 330 | 280 | 280 |
| மஹடிவுல்வெவ | 350 | 350 | 350 |
| கிளிவெட்டி | 209 | 150 | 150 |
| மொத்தம் | 1,121 | 884 | 830 |